# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சக்திவேல் | Caste | : | |
| S/o. | : | வையாபுரி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 01.12.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தாரமங்கலம் லட்சுமாயூரில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். கருக்குப்பட்டியில் குடியிருக்கும் செல்லான் (எ) செல்வராஜுடன் மரம் அறுக்கும் வேலைக்கு போவேன். எங்களுடன் டிரைவர் மணியும் சுற்று வட்டாரத்தில் உள்ள மரங்களை அறுத்து செங்கல் சூளைக்கு கொண்டு போய் கொடுப்போம்.

2023ம் வருடம் ஜனவரி மாதம் ஒரு நாள், நானும் ஆஜர் எதிரியும்

பன்றி கறி எடுத்து சமைத்து சாப்பிட்டோம். மறுநாள் ஆஜர் எதிரி, இறந்துபோன மணி மற்றும் நானும் எங்கள் முதலாளி குமாருக்கு சொந்தமான வெள்ளை நிற இருசக்கர வாகனமான ஸ்கூட்டியில் அண்ணா சிலை அருகே உள்ள ஒயின்ஷாப்பிற்கு சென்று மது வாங்கி அருந்தினோம். மது அருந்திவிட்டு நான் வேலை விசயமாக வாழப்பாடி சென்றுவிட்டேன். ஆஜர் எதிரியும் இறந்துபோன மணியும் ஒயின்ஷாப்பில் இருந்தார்கள். மணி கொலை செய்யப்பட்டு இறந்தபிறகு போலிசார் என்னை சந்தேகப்பட்டு விசாரித்தார்கள். அதன்பிறகு ஆஜர் எதிரி மணி என்பவரை கொலை செய்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.